## கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

P.W.–2

O.S.No.336/2024

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 09 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி திரு.கே.ஆர். கண்ணன், பி.ஏ., பி.எல்., கூடுதல் சார்பு நீதிபதி, திருப்பூர் அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு. சபீனா பேகம் | வயது: 54 |
| க/பெ. : திரு. நூர் முகமது | முகவரி: |
| தொழில் : | |

**முதல் விசாரணை :**

வாதி ஆஜர். 1ம் பிரதிவாதி ஆஜர். வாதி, பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். தாவாவில் நான் வாதியின் மணைவி. முதல் விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன். ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. தாவா சொத்து எந்த தேதியில் யார் பெயரில் கிரயம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என் பெயரில் சொத்துக்கள் உள்ளது. சபீனா பேகம் பெயரில் உள்ளது. இதன் விவரங்களை வழக்கறிஞரிடம் சொன்னேனா என்றால் சொன்னார்கள். தாவா சொத்தை பொறுத்து யாருக்கு பொது அதிகாரம் கொடுக்கப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. தற்போது சொத்து யார் பெயரில் உள்ளது என்றால் முத்துப்பாண்டி பெயரில் உள்ளது. பிரதிவாதிகள் தாவா சொத்தை பொறுத்து வேறு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து தெரியுமா என்றால் தெரியும். அந்த வழக்கில் தாவா சொத்தில் இருந்து என்னை காலி செய்யும்படி தீர்ப்பான விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

2. பிரதிவாதிகள் தாக்கல் செய்த வழக்கில் என்னுடைய கணவர் ஆஜராகி வழக்கு நடத்திய விவரங்கள் எனக்குத் தெரியும் என்றால் ஆமாம். எத்தனை வருடங்கள் வழக்கு நடந்தது என்றால் பத்து வருடங்கள் நடந்தது. பிரதிவாதிகளால் தாக்கல்

செய்யப்பட்ட தாவா எங்களுக்கு எதிராக தீர்ப்பானது எதிர்த்து என் கணவர் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்த விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அதன் விவரங்களை என் கணவரிடம் சொன்னாரா என்றால் சொன்னார்.

3. என்னுடைய கணவர் என்ன சொன்னார் என்றால் வழக்கு நடந்து வருவதாக சொன்னார். தற்போது தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு புதியதாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். தாவாவை என் கணவர் தாக்கல் செய்துள்ளது தவறு என்றால் சரியல்ல. ஏற்கனவே நடந்து விவரங்களை மறைத்து கரைப்படைந்த கரங்களுடன் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தாக்கல் செய்த வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பின்படி தாவா சொத்தில் இருந்து காலி செய்து நாங்கள் ஒப்படைக்க வேண்டும் என்ற உத்தரவு மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்டுள்ளதால் இந்த தாவாவே செல்லாது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் சுவாதீனத்தை பிரதிவாதிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்றால் தவறு.

4. முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் எதுவுமே எனக்குத் தெரியாது என்றால் தவறு. அதனால்தான் என் கணவர் பெயரில் தாவா சொத்து உள்ளது என்பதை தெரிந்து கொண்டும் என் பெயரில் உள்ளதாக கூறுகிறேன் என்றால் தவறு. தாவா சொத்தை பொறுத்து என் கணவருக்கும் பிரதிவாதிகளுக்கும் இடையே கடன் போக்குவரத்து இல்லை பொது அதிகார முகவரிடம் முறையான கிரய தொகை செலுத்தி தாவா சொத்து கிரையம் பெறப்பட்டுள்ளது என்றால் தவறு. வட்டிக்கு பணம் பெற்றோம் சொத்து விற்பனை செய்யவில்லை.

5. கடந்த 15 வருடங்களாக தாவா சொத்து யார் பேரில் உள்ளது என்றால் பிரதிவாதிகள் பெயரில் உள்ளது. தாவா சொத்தை கிரயம் செய்து கொடுத்த பிறகு வாடகைக்கு இருந்து கொள்வதாக நாங்கள் சொன்னதன் பேரில் தாவா சொத்தில் வாடகை இருந்து வந்தோம் என்றால் தவறு. நாங்கள் சொத்தை கடனுக்காக கொடுத்திருந்தோம். வாடகைதாரராக இருந்ததால் தான் வாடகை நீதிமன்றத்தில் முறையாக பிரதிவாதிகள் மனு தாக்கல் செய்து அவர்கள் பெயரில் தீர்ப்பு ஏற்பட்டுள்ளது என்றால் தவறு. தாவா சொத்தைப்

பொறுத்து என்னுடைய கணவர் பொது அதிகார ஆவணம் ஏற்படுத்தி உள்ளார் என்றால் சரி.

6. பொது அதிகார ஆவணத்தின் படி முதல் பிரதிவாதி தாவா சொத்தை ரெண்டாம் பிரதிவாதிக்கு விற்பனை செய்தார் என்றால் விற்பனை செய்ய வேண்டிய அவசியம் இல்லை. பொது அதிகார ஆவணத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. பொது அதிகார ஆவணம் தற்போது வரை ரத்து செய்யப்பட்டு விட்டதா என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கடன் கொடுக்கல் வாங்கலுக்காக ஆவணங்கள் ஏற்பட்டது என்பதை பொறுத்தும் கடன் கொடுத்து கடன் செலுத்தியதற்கான ஆவணங்கள் தாவாவில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா செல்லாது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்னுடைய சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றால் தவறு.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2026.03.09 13:24:41 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.